**19.04.2023. OS. 88 /2018 வா.சா.1 – ராமநாதன்**

**2,3,5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

**2ம் பிரதிவாதி பிராது 4வது இலக்க சொத்தான நத்தம் பட்டா எண். 521ல் சர்வே எண். 440-2ல் பாகப்பிரிவினை படி தனக்கு ஒதுக்கப்பட்ட ஏற்கனவே இருந்த ஓட்டுவீட்டை கடந்த 2012ம் ஆண்டு இடித்துவிட்டு பாகனேரி ஊராட்சி மன்றத்தில் முறையாக அனுமதி பெற்று தற்போது புதிதாக தார்சுவீடு கட்டி தனது பெயரில் வரி வகையறா செலுத்தி தனது குடும்பத்துடன் தனியாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் தனியாக வீடு கட்டப்பட்டுள்ளது ஆனால் அது பொதுக்குடும்ப சொத்து தான். பிராது சொத்துக்களில் 1வது இலக்கமான பட்டா எண். 252ல் வரிசை எண்.6ல் கண்டுள்ள புல எண். 107-13 புஞ்சை நிலம் அதில் உள்ள வட்டக்கிணறு, பம்ப்செட் மோட்டார் மின் இணைப்பு மற்றும் வரிசை எண். 7ல் கண்டுள்ள 92-3 வரிசை எண். 8ல் கண்டுள்ள புல எண். 94-2 பிராது 2வது இலக்க சொத்தில் வரிசை எண். 1 முதல் 4 புல எண்கள் மற்றும் வரிசை எண்.8ல் கண்டுள்ள புல எண். 237-24 வரிசை எண். 11ல் கண்டுள்ள 245-11ஏ வரிசை எண். 13ல் கண்டுள்ள புல எண். 241-3சி வரிசை எண். 14ல் கண்டுள்ள 241-6பி பார்ட், வரிசை எண். புல எண். 171-3ஏ மற்றும் வரிசை எண் 17ல் கண்டுள்ள புல எண். 171-3பி மற்றும் பிராது 3வது இலக்க சொத்தான வரிசை எண்.1ல் கண்டுள்ள புல எண். 440-1ல் கண்டுள்ள ஓட்டுவீடு வாய்மொழி பாக படியும், பாக விஸ்தி பத்திரத்தின் படியும், 3ம் பிரதிவாதி சுகுமாரனுக்கு பாகபடி ஒதுக்கப்பட்டு அவர் தனித்து பாத்தியமடைந்து வரிகளைச்செலுத்தி அவர் தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிராதில் கண்ட 1வது இலக்க பட்டா எண். 252ல் வரிசை எண். 4ல் கண்ட புல எண். 239-1 சொத்துவிபரத்தில் 2வது இலக்கமாக உள்ள பட்டா எண் 210ல் வரிசை எண். 3ஆக கண்டுள்ள புல எண். 124-4ஏ பார்ட், வரிசை எண். 5ல் கண்டுள்ள புல எண். 126-3 வரிசை எண். 14ல் கண்ட 241-6பி, வரிசை எண். 18ல் கண்ட 172-5சி1, வரிசை எண். 19ல் கண்ட 172-5சி2, வரிசை எண். 20 மற்றும் 21ல் கண்டுள்ள 48-7, 61-2பி, மற்றும் 5வது இலக்கமாக கண்டுள்ள காரைக்குடி டவுன், அண்ணாநகரில் டி.எஸ்.எண்.**

168-1ஏ1ஏ 1740ச.அ பகுதி மனைஇடமும், அதில் உள்ள தார்சு வீடும் சொத்துவிபரத்தில் காணாத வேறு சில சொத்துக்கள் வாய்மொழி பாகபடியும், பாக விஸ்தி பத்திரப்படியும், 4ம் பிரதிவாதிக்கு பாகபடி ஒதுக்கப்பட்டு அவர் தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிராது சொத்துவிபரத்தில் உள்ள 1வது இலக்கமான பட்டா எண். 252ல் வரிசை எண்.5ல் கண்ட சர்வே எண். 244-4ஏ, 2வது இலக்கமாக கண்டுள்ள பட்டா எண். 710ல், வரிசை எண். 9ல் கண்ட சர்வே எண். 245-1, வரிசை எண். 12ல் கண்ட சர்வே எண். 282-2, வரிசை எண். 15ல் கண்ட 81-7, பிராது சொத்துவிபரத்தில் 3வது இலக்கமாக கண்டுள்ள வரிசை எண். 2ல் கண்ட சர்வே எண்.627-8ல் கண்ட ஓட்டுவீடு, பிராது சொத்துவிபரத்தில் காணாத பட்டா எண். 1192ல் கண்டுள்ள சர்வே எண்கள். 171-5ஏ, 171-6பி, 5வது இலக்கமாக கண்டுள்ள காரைக்குடி டவுன், அண்ணாநகரில் உள்ள பகுதி மனைஇடமும், மற்றும் பிராதில் காணாத காரைக்குடி 1ம் பிரதிவாதியின் கணவரும் வாதி மற்றும் 2 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் உள்ள நகை அடகுகடையான நித்தியானந்தம் கார்ப்பரேசன் ஆகிய சொத்துக்களும் வாய்மொழிபாகபடியும், பாக விஸ்தி பத்திரப்படியும், எனக்கு கிடைத்து அதை நான் தனியாக பாத்தியமடைந்து வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட நித்தியானந்தம் கார்ப்பரேட் நிறுவனத்தை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் தாவா வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிராது சொத்துவிபரத்தில் 1வது இலக்கமாக கண்டுள்ள பட்டா எண். 252ல் கண்டுள்ள பிராதில் காணாத புல எண்கள். 99-4, 104-4, 107-9, 107-10ல் பாதிபாகம், ஆகியவை எனது சகோதரி ராஜேஸ்வரி பாகத்தில் ஒதுக்கப்பட்டு அவர் தனியாக பாத்தியமடைந்து அனுபவம் செய்துவருகிறார் என்றால் அது அவருக்கு சீதனமாக கொடுத்த சொத்தாகும். மேற்படி சொத்துக்கள் பாகபடி அவர் தனியாக அனுபவித்து வருகிறார் சீதன சொத்துக்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிராதில் கண்ட பட்டா எண். 252, தாவா பிராதில் காணாத புல எண். 99-3, 105-4, 107-10ல் பாதி பாகம் 6ம் பிரதிவாதி தாமரைச்செல்வி பாகத்திற்கு

குடும்ப ஏற்பாட்டின் படி ஒதுக்கப்பட்டு அவர் தனியாக பாத்தியமடைந்து வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, அது அவருக்கு சீதனமாக கொடுக்கப்பட்டது. சீதன சொத்து என்று வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகள் நல்லமுறையில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு அவர்கள் தங்கள் குடும்பத்தோடு தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2012ம் ஆண்டு வரை எனது அம்மா என்னுடன் நேசமாகத்தான் இருந்தார். எனது அம்மா 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்கள் எல்லாம் பிரிவினை செய்யப்பட்டது என்று சொல்லித்தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 5,6 பிரதிவாதிகள் தனியாக பாகம் கேட்டதாகவும், அதற்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் மறுத்துவிட்டதாகவும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகளும், பிராது சொத்துக்கள் அனைத்தும் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்று சொல்லித்தான் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளனர். 4ம் பிரதிவாதிக்கு, 2,3 பிரதிவாதிகள் உறுதுணையாக இருந்துவந்தார்கள் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் பொதுக்குடும்பத்திற்கு விரோதமாக செயல்பட்டுவந்தனர் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பாகத்திற்கு கிடைத்த நித்தியானந்தன் கார்பரேசன் அடகுகடையை காரைக்குடியில் இன்றையதேதி வரை நடத்திவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 05.01.2022 பாக பாத்திய ஆதரவின் படி தாவாசொத்துக்கள் அனைத்தும் பாகம் பிரிக்கப்பட்டு தாவா சொத்துக்கள் அனைத்தும் அவரவர் அனுபவத்தில் தனித்தனியாக வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 05.01.2022ம் தேதிய பாகபாத்திய ஆதரவு ஊர்ஜிகத்திற்கு வந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.